தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 15.07.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 16063/SCIC/2024**

திரு.ப.பழனி - மேல்முறையீட்டாளர்
எண்.24, ஆண்டாள் நகர்
பாலு செட்டிச் சத்திரம்
காஞ்சிபுரம் - 631 551
Cell:74180 73247.

*/எதிர்/*

1.பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக
உதவியாளர் (நிலம்)
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
காஞ்சிபுரம் - 631 501.
2.பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
காஞ்சிபுரம் - 631 501.

## ஆணை

| | | |
|---|---|---|
| 1. | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **16.09.2024** |
| 2. | மனுதாரரின் மனு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் | 08.10.2024 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 24.10.2024 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 09.12.2024 |
| 4. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 30.12.2025 |
| 5. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 19.02.2026 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 16/09/2024 நாளிட்ட மனுவை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பி, அதில் "மாவட்ட ஆட்சியர் மக்கள் குறை தீர் முகாம் மனு நாள் 16/03/2020 இம்மனுவின் ஒப்புகைச் சீட்டு இணைத்துள்ளேன். அதன் மீது தாங்கள் எடுக்கப்பட்ட நடவடிக்கையை தகவலாக வழங்கவும்." என்பன போன்று 3 (மூன்று) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (15/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் தனது மகன் திரு.விக்னேஷ் என்பவருடன் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திருமதி.ர.விஜயலட்சுமி, கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் திருமதி.மு.ஜெயசுதா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், காஞ்சிபுரம் வட்டம் (ம) மாவட்டம் ஆகியோர் ஆஜரானார்கள். மனுதாரரின் மனு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்யப்பட்டு, 08/10/2024 தேதியிட்டு, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், காஞ்சிபுரம் வட்டம் அவர்களுக்கு முகவரியிட்டுள்ளதோடு, மனுதாரருக்கும் நகலிடப்பட்டுள்ளது. ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரர், மாவட்ட ஆட்சியர் மக்கள் குறை தீர் மனு நாளில் 16/03/2020 அன்று பட்டா மாற்றம் தொடர்பாக மாவட்ட ஆட்சியரிடம் மனு சமர்ப்பித்துள்ளார். மேற்சொன்ன மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தை 16/09/2024 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ன் வாயிலாக அளிக்கக் கோரியிருப்பதாகத் தெரிய வருகிறது. மேலும், மனுதாரர் தெரிவிக்கையில், தனக்கு மிகவும் காலதாமதமாகவும், தவறானதாகவும் பொதுத் தகவல் அலுவலரால் பதில் அளிக்கப்பட்டிருப்பதாகவும், தனது மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரம் இதுநாள் வரை தனக்கு அளிக்கப்படவில்லை என்றும் புகார் தெரிவித்தார். **எனவே, மனுதாரர் உரிய ஆவணங்களுடன், காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 22/07/2026 அன்று காலை 11.00 மணிக்கு சென்று அங்கு திருமதி.ஜெயசுதா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், மனுதாரர் அளிக்கும் ஆவணங்களை பெற்றுக் கொண்டு, அதன் மீது முறையான விசாரணை நடத்தி, மனுதாரரின் 16/03/2020 தேதியிட்ட மனுவின் மீது எடுத்த நடவடிக்கையான பட்டா மாற்றம் குறித்த விவரத்தினை 31/07/2026-க்குள் மனுதாருக்கு விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மேலும், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), அவர்கள் மனுதாரருக்கு தவறான பதில் அளித்துள்ளார். அதனை ஆணையம் ஏற்கவில்லை. எனவே, இனி வருங்காலங்களில் மனுதாரருக்கு தகவல் அளிக்கும் முன்னர் அதன் மீது தீவிரமான முறையில் கவனம் செலுத்த வேண்டுமென்று எச்சரிக்கப்படுகிறது. இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 16063/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

1.பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்)
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
காஞ்சிபுரம் - 631 501.

2.பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
காஞ்சிபுரம் - 631 501.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.ப.பழனி
எண்.24, ஆண்டாள் நகர்
பாலு செட்டிச் சத்திரம்
காஞ்சிபுரம் - 631 551
Cell:74180 73247.

RG/Sr.PC